C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 15 FEBRUARY '2023 ஆகாரம் : 02

## இனி நான் அல்ல,

# கிறிஸ்துவே

## எனக்குள் பிழைத்திருக்கிறார்;

\- கலாத்தியர்: 2:20

## IT IS NO LONGER I WHO LIVE, BUT CHRIST LIVES IN ME


-GALATIANS:2:20

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>5.00 PM<br>6.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>GENERAL ASSEMBLY & BIBLE CLASSES<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| SAT<br>7.45 PM<br>9.00 PM | 1 ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN'S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| WED<br>7.45 PM | ASH WEDNESDAY<br>SPECIAL SERVICE<br>TIMING - 7.45 PM |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# FROM THE PASTOR'S

# *Desk*



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

" கிறிஸ்துவுனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காக் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"

—கலாத்தியர்: 2:20



*'I have been crucified with Christ; it is no longer I who live, but Christ lives in me; and the life which I now live in the flesh I live by faith in the Son of God, who loved me and gave Himself for me'*

-Galatians:2:20

## LENT – லெந்து நாட்கள் (தபசு காலங்கள்)

லெந்து காலங்கள் என்பது அருளின் காலம், இரக்கத்தின் காலம், மன்னிப்பின் காலம்.அத்துடன் கடவுள் மனக்குலத்துடன் (நம்முடன்) செய்த உடன்படிக்கையை புதுப்பிக்கின்ற காலம். புதியவைகளை, புதிய வாழ்க்கையை, புதிய சிந்தனைகளை பெற்றுக் கொள்ளும் காலம். நம்முடைய சுய வெறுப்பின் வழியாக மனம் திரும்பி புதுவாழ்வுக்கு, பரிசுத்த வாழ்வுக்கு அழைக்கும் காலம்.இது ஒரு ஆன்மீக காலம், வசந்த காலமாகும்

## லெந்து காலம் (அ) தபசு காலங்களின் மைய சிந்தனை

இது சுய வெறுப்பின் காலம், தன்னைத் தானே வெறுத்து ஆண்டவரின் விருப்பத்திற்கு அர்ப்பணிக்கும் காலம், இது ஒரு உபவாசத்தின் காலம் "உப்—வாஷ்" உப்—என்றால் அருகில், வாஷ்— என்றால் வசித்தல் என்பதாகும். எனவே ஆண்டவரின் அருகில் வசித்தல், வாழ்தல் என்பது நம்முடைய வாழ்வின் மேன்மையின் காலம். சிலுவை வழியாக ஆண்டவர் நமக்கு வாழ்வின் மேன்மையை கொடுத்தார் என்பதை புரிந்து கொண்டு அற்பணிக்கின்ற காலம் தான் இந்த லெந்து காலம். எனவே இந்த லெந்து காலங்களின் பொருளுணர்ந்து இந்த நாட்களில் ஆண்டவருக்குள் விசுவாசத்தோடு நிலைத்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

## லெந்துகால தியானம்-2023

இந்த தபசு காலங்களில் நமது திருச்சபையின் வழியாக வருகின்ற 40 நாட்கள் லெந்துகால தியானம் ஒவ்வொரு நாளும் காலை:6.00 மணி முதல் 6.30 மணி வரை தினமும் நடைபெறும். இது ரோமர் நிருபத்தில் இருந்து திருமறை ஆய்வு ZOOM – வாயிலாக நடைபெறும் திருச்சபையின் குடும்பத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## குடும்ப ஜெபகூடுகை

### (COTTAGE PRAYER METTING

இந்த புதிய ஆண்டில் நமது திருச்சபையின் குடும்பங்களில் குடும்ப ஜெபம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனவே ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மாலை.7.30 மணிக்கு குடும்ப ஜெபம் நடைபெறும். திருச்சபையின் குடும்பத்தார் உங்கள் வீட்டில் நடத்துவதற்கு முன்கூட்டியே தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தொடர்ந்து இந்த காலங்களில் நமது வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்களின் கல்விக்காக அவர்கள் எழுத இருக்கும் தேர்வுகளுக்காக, உயர் கல்விக்காக, அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கபடுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த வருகின்ற காலங்களில் புதிய தரிசனங்களுடன் எதிர்நோக்கவும், புதிய நண்மைகள், புதிய ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கு துணை செய்வாராக

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்

Rev.S.D.Baskar

# சிலுவை : சுயவெறுப்பிற்கான (தன் மறுப்பு) ஓர் அழைப்பு

# CROSS: A CALL TO SELF- DENIAL

யோவேல்: 2:12-20, கலாத்தியர்: 2:15-21, லூக்கா:9:23-27

## முன்னுரை:

திருச்சபை ஒழுங்கின் படியும் தபசு நாட்களில், லெந்து நாட்களில் துவக்க நாள் சாம்பல் புதன். இது கிறிஸ்துவ வாழ்வின் ஒரு முக்கியமான காலம் ஆன்மீக வாழ்வில் வசந்த காலம். ஆதித்திருச்சபை கொண்டாடிய ஒரே பண்டிகை உயிர்த்தெழுந்த பண்டிகை. இதற்காக நாற்பது நாட்கள் ஆயத்தப்பட்டனர். இந்த 40 நாட்கள் புதன்கிழமை துவங்க காரணம்? ஞாயிற்றுக்கிழமைகள் உபவாச நாட்களாக கருதப்படாததால், ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்க்கின்ற பொழுது லெந்து நாட்களின் துவக்கம் புதன்கிழமைகளில் துவங்கும். சாம்பல் புதன்கிழமை தியானத்திற்காக நாம் சிந்திக்கின்ற இந்தசிந்தனை

"சுய வெறுப்பு இல்லாமல் உண்மை கிறிஸ்தவராய் வாழ முடியாது, சாட்சி பகர முடியாது. எனவேதான் அருள் நாதர் இயேசு கிறிஸ்து அவரை பின்தொடர விரும்புகிறவர்கள் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் பின்பற்ற அழைக்கின்றார்"

— லூக்கா:9:23—27

## சிலுவை:

தொடக்க காலத்தில் சிலுவையின் வழியாக பெரும் குற்றவாளிகளை தண்டிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கருவி தான் சிலுவை. ஒரு குற்றவாளியை சிலுவையில் அறையப்படும் போது உடல் அளவில் அவமானப்படுத்தப்படுகிறார்.

அந்தக் குற்றவாளியின் உடலில் உள்ள ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக்கப்படுவார்கள். சாகும்வரை சிலுவையிலே தொங்கி வேதனைகளை அனுபவித்து மரிப்பது என்பது விவரிக்க முடியாத அவமானம் ஆகும்.

அப்படிப்பட்ட அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை இயேசு மீட்பின் கருவியாக மாற்றுகிறார். அவமானத்தின் சின்னமாக கருதப்பட்ட சிலுவை மனிதர்களுக்கு பாதை காட்டுகிறது. "மடமையாக எண்ணப்பட்ட சிலுவை சின்னம் இயேசுவின் மரணத்தினால் வாழ்வின் ஊற்றாக உருவெடுக்கிறது".

கிறிஸ்து ஏன் சிலுவை மூலம் உலகைமிட்டார். எதிலிருந்து மரணம் தோன்றியதோ, அதிலிருந்து புதிய உயிர் பெறவும் மரத்தினால் தோல்வி கண்டவன், மரத்தினாலேயே வெற்றி பெறவும் வேண்டுமென்று இருந்தது. ஒரு மரத்தின் மூலம் மரணம் இந்த உலகில் நுழைந்தது. அதைக் கடவுள் மற்றொரு மரத்தின் மூலம், அதாவது சிலுவை மரத்தின் மூலம் அழித்தார், மரத்தைக் கொண்டு மனிதரை வென்ற பிசாசை, மரத்தைக் கொண்டே, அதாவது சிலுவை மரத்தைக் கொண்டே அழித்தார், தோற்கடித்தார். மக்கள் அனைவரும் மீட்படைய உலகம், பிசாசு, சரிரம் என்ற பாவத்திலிருந்து விடுதலையடைந்து வெற்றியடைய, இயேசு சிலுவையை ஏற்றுக் கொண்டார்.

## சுய வெறுப்பு (தன்மறுப்பு) என்பது என்ன?

### 1. சிலுவை: மனம் திரும்புதலுக்கான வாழ்க்கை

(THE CROSS: A LIFE OF REPENTANCE) யோவேல்: 2:12–20

இரட்டு உடுத்தி சாம்பலில் இருப்பது என்பது திருமறையில் குறிப்பாக பழைய ஏற்பாட்டின்படி மனஸ்தாபப்படுவதற்கு, மனம் திரும்புவதற்கு ஒரு அடையாளம். (2சாமுவேல்:13:9, யோபு:42:6, தானியேல்:9:6, ஏசாயா:61:3, யோனா:3:6) மனம் திரும்புதலுக்கு ஏற்ற துவக்கம், புது வாழ்வுக்கு, பரிசுத்த வாழ்வுக்கு, இறைவன் விரும்பும் வாழ்வுக்கு வித்திடுகின்றது. யோவேல் தீர்க்கதரிசி (யோவேல்:2:12-20) ஆசிர்வாதம் அற்ற தன்மையில் இருந்து ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஆண்டவருடைய நாள் சமீபமாய் இருப்பதாலும் மனம் திரும்ப அழைக்கின்றார். இதற்கு செய்ய வேண்டியது என்னவெனில் உண்ணா நோன்பு (உபவாசம்) இருக்க வேண்டும். யோவேல்:2:20 -இல் அழுகையோடு, புலம்பலோடு, மன வேதனையோடு, முழு இருதயத்தோடு, உள்ளான மனதோடு இருதயத்தை கிழித்துக்கொண்டு உள்ளம் குத்தப்பட்டு தவற்றை, மீறுதல்களை உணர்வது. இவை மனஸ்தாபப்படுவதற்கு அடையாளம் வேறுவிதத்தில் சொல்ல வேண்டுமானால் செய்த தவற்றிக்காக மனஸ்தாபப்பட்டு மனம் திரும்ப அழைக்கின்றார். மனம் திரும்புதல் என்பது உலகத்தின் பக்கத்திலிருந்து இறைவன் பக்கம் திரும்ப மனம் திரும்ப யூத மக்களை அழைக்கின்றார். இது சுய வெறுப்பின் முதற்படி ஆகும்.

> "ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது"
>
> - ரோமர்:5:21

## 2. சிலுவை: சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை. (THE CROSS: CRUCIFIED LIFE)

கலாத்தியர்:2:15–21

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை. பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைப்பது இயேசு கிறிஸ்து உலகத்திற்காக சிலுவையில் அறையப்பட்டது போல நாம் நம்மை உலகத்திற்காக சிலுவையில் அறையப்படுதல். ஒருவர் தன்னை வெறுமை ஆக்காமல் தன்னை சிலுவையில் அறைய முடியாது, தாழ்மையாக்கப்பட்ட வாழ்க்கை தான் சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கை, இது தான் சுய வெறுப்பு ஆகும். அப்போஸ்தலனாகிய பவுலும் தான் தன்னை சிலுவையில் அறையப்பட்டதாக, தான் பிழைத்திருப்பது தனக்காக அல்ல இயேசுவுக்காக பிழைத்திருப்பதாக இயேசுவோடு கூட சிலுவையில் அறையப்பட்டதாக குறிப்பிடுகின்றார். (கலாத்தியர்:2:19) இனி நான் அல்ல, கிறிஸ்துவே தனக்குள் வாழ்வதாக குறிப்பிடுகின்றார். இதுதான் உண்மையான சுய வெறுப்பு ஆகும். இன்றைக்கு நாம் கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோமா? உலகத்தையும் அதில் இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கின்றோமா? பவுலை போல தபசு நாட்களில் உலகத்தையும் அதன் இச்சைகளையும் சிலுவையில் அறைய நம்மை ஒப்புக்கொடுக்க நாம் சுய வெறுப்பின் வாழ்வைக்காக அழைக்கப்படுகிறோம்

## 3. சிலுவை: தன்னை வெறுத்து இயேசுவைப் பின்பற்றும் வாழ்க்கை

(THE CROSS: A LIFE OF SELF-DENYING AND FOLLOWING JESUS)

லூக்கா:9:23–27

இயேசு தம்மை பின்பற்ற விரும்புபவர் யாராயிருந்தாலும் தன்னைத்தான் வெறுத்து, ( மறுத்து) தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அனுதினமும் பின்தொடர அழைக்கின்றார். ( லூக்கா:9:23) நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த இயேசுவுக்காக வாழ்வது முக்கியமாகும். இங்கு "மறுத்து " என்ற வார்த்தை பேதுரு இயேசுவை மறுதலித்த *(DENY)* வார்த்தையும் ஒன்றே. இதன் பொருள் மறுப்பது *(REPUDIATE)* நிராகரிப்பது ( *RENOUNCE)* கைவிடுவது( *DISOWN)* இங்கு இயேசு குறிப்பிடுகின்ற வெறுத்தல் என்பது ஏதோ இந்த தபசு நாட்களில் நாம் கைவிடுகின்ற உணவுப் பழக்க வழக்கங்களை அல்ல. மாறாக, நமது சுய விருப்பத்திற்கு வாழும் வாழ்வை மறுத்து, நற்செய்திக்காகவும், கிறிஸ்துவுக்காகவும் வாழுகின்ற வாழ்வு. மறுப்பது என்பது நமது வாழ்வை கட்டுப்படுத்தும் உரிமையை விட்டு விட்டு அந்த உரிமையை இயேசுவுக்காக கொடுப்பது. சுயத்தை வெறுத்து அந்த இடத்தில் இயேசுவை அமர செய்பவர்கள் . நமது சுய விருப்ப வாழ்வை வெறுத்து சுயத்தை சிலுவையில் அனுதினம் அறைந்து, நாம் சிலுவை எடுத்துக்கொண்டு இயேசுவை பின் தொடர அழைக்கப்படுகின்றோம். சிலுவை என்றாலே பாடு, துக்கம், மரணம்,

வேதனை என்று பொருள். இயேசுவை பின் தொடர இப்படிப்பட்ட துன்பத்தை சகிக்க அல்லது சந்திக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும். இது நம்மை நாம் வெறுக்காமல் முடியாது.

## நிறைவாக:

இன்றைக்கு கிறிஸ்தவ வாழ்வில் சுயத்தை வெறுத்து (தன்னை மறுத்து) இயேசுவின் சித்தம், அவருடைய எண்ணம், செயல்பாடு இவற்றைப் புரிந்து கொண்டு வாழ்வது.அப்படி வாழ வேண்டுமெனில் சுயத்தை வெறுத்து இயேசுவின் சிலுவையை நாம் சுமப்பது தான் சுய வெறுப்பிற்கான காலங்களாகும். இந்த தபசு நாட்களில் சுயத்தை வெறுத்து இயேசுவை பின்பற்றி வெளிக்காட்ட நாம் அழைக்கப்படுகிறோம். அப்படிப்பட்ட வாழ்வை ஆண்டவர் நம் அனைவருக்கும் அருள்வாராக.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.
சிலுவை நாதரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.



Rev.S.P.Baskar






# சமாரியப் பெண் சாட்சி பகர்ந்தவள்

—யோவான் 4 : 28—30, 39—42

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

சமாரியப் பெண் பெயர் குறிப்பிடப்படாதவர். மேசியாவைப் பற்றி சில காரியங்களை கேள்விப்பட்டிருந்தாள். இப்பெண்ணுக்கம் இயேசுவுக்கும் நிகழ்ந்த உரையாடலே இந்த தியானம். ஆண்டவர் இயேசு ஒரு முறை சமாரியாவில் உள்ள சீகார் என்ற ஊருக்கு சென்றிருந்தார். இயேசு களைப்படைந்தவராய் அங்கேயிருந்த கிணற்றருகே உட்கார்ந்திருந்தார். பகல் பன்னிரண்டு மணி அப்பொழுது. சமாரியப் பெண் ஒருத்தி தண்ணீர் மொண்டுக்கொள்ள வந்தாள். இயேசு அவளிடம் தாகத்துக்கு தண்ணீர் தா என்று கேட்டார். இயேசுவை கண்ட அந்தப் பெண் இயேசு யூதர் என்று அறிந்து கொண்டார். அதனால், நீர் யூதர், நான் சமாரியப் பெண்.



> **அந்த ஸ்திரீயின் வார்த்தையினிமித்தம் அந்த ஊர்ச் சமாரியாவில் அநேகர் அவரில் விசுவாசம் வைத்தார்கள்**
>
> **– யோவான் 4 : 39**

தாகத்துக்குத் தா என்று என்னிடம் கேட்பது எப்படி? என்றாள். யூதர்களோடு சமாரியர்கள் உறவாடுவதில்லை.

இயேசு அந்த பெண்ணைப் பார்த்து, தாகத்துக்குத் தா என்று உன்னிடம் கேட்கிறவர் யார் என்று நீ அறிந்திருந்தால் நீயே அவரிடம் கேட்டிருப்பாய். அவர் உனக்கு ஜீவ தண்ணீரை தருவார் என்றார். சமாரியப் பெண்ணின் கடந்தகால குடும்ப வாழ்வையும் நிகழ்கால வாழ்வையும் இயேசு சொன்னார். சமாரியப் பெண் இயேசுவை தீர்க்கதரிசி என்று அறிந்து கொண்டாள். கிறிஸ்து எனப்பட்ட மேசியா வருகிறார் என்று தெரியும் என்றாள். இயேசு அவளைப் பார்த்து உன்னோடு பேசும் நானே அவர் என்றார். அவர்தான் மேசியா, என்று நம்பினாள். உடனடியாக ஊருக்குள் ஓடிச் சென்றாள். சாட்சி பகர்ந்தாள். அவளுடைய வாழ்வில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. இயேசுவின் உபதேசத்தைக் கேட்ட அநேகர் அவரிடம் நம்பிக்கை வைத்தார்கள். அவரே உலக இரட்சகர் கிறிஸ்து என்று அறிந்தார்கள். சாட்சி பகர்ந்தார்கள். சமாரியாவில் கிறிஸ்துவை அறியக் காரணமாய் இருந்தவர் இந்தப் பெயர் சொல்லப்படாத பெண்.

நம்மை முழுமையாக அறிந்தவர் நம் ஆண்டவர். நமக்கு எப்போது எது தேவை என்பதை அறிந்து நிறைவேற்றுபவர் அவரே. நமக்கு வாழ்வு தரும் தண்ணீரைத் தருகிறவர் ஆண்டவர் இயேசுவே. இயேசுவை நம்பும் பிள்ளைகளுக்கு நித்திய வாழ்வு உண்டு. இயேசுவே வாக்களிக்கப்பட்ட மேசியா. திருமறை எழுத்துக்களில் அவரைக் கண்டுகொள்ளுவோம். அவரில் விசுவாசம் வைப்போம். பாவங்களை அவரிடம் அறிக்கையிடுவோம். பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுவோம். மகிழ்ச்சியை பிறருடன் பகிர்ந்து கொள்ளுவோம். சாட்சியாய் வாழுவோம்

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*

# John 4:39-42

The Message

Many of the Samaritans from that village committed themselves to him because of the woman's witness: "He knew all about the things I did. He knows me inside and out!" They asked him to stay on, so Jesus stayed two days. A lot more people entrusted their lives to him when they heard what he had to say. They said to the woman, "We're no longer taking this on your say-so. We've heard it for ourselves and know it for sure. He's the Savior of the world!"

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துகள். இந்த மாதத்தில் சங்கீதக்காரனின் நம்பிக்கை மனிதனை சார்ந்ததல்ல சர்வத்தையும் உண்டாக்கி ஆளுகிற தேவன் மேல் இருந்தது.




## "கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும்"

—சங் 121:2

நம்முடைய நம்பிக்கை எதன்பேரில் இருக்கிறது? நிச்சயமாக நாம் கர்த்தரிடத்தில் இருந்து ஒத்தாசையை எதிர்ப்பார்க்கலாம். விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் அவரை நோக்கிப் பார்க்கும் பொழுது பரத்திலிருந்து நமக்கு ஒத்தாசை அனுப்புகிறவராக இருக்கிறார். இன்னுமாக அவர் நம்மை இருக்கிறார். இன்னுமாக அவர் நம்மை பாதுகாக்கிறவராக இருக்கிறார். வேதம் சொல்லுகிறது

இந்த உலகத்தில் ஒத்தாசையை, கிருபையை, இரக்கத்தை, நன்மையை வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தர் நமக்குக் கொடுக்கிறார். மனிதனை நம்புவது வீண். நம்முடைய அறிவையும், ஞானத்தையும் சார்ந்திருப்பது வீண். ஆனால் கர்த்தரை நம்புவோருக்கு எப்பொழுதும் நன்மையே. அவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போகமாட்டார்கள். ஆகவேதான் வேதம்:

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்;

மனிதன் மாறுகிறவன். சூழ்நிலைகள் மாறக்கூடியவைகள். நம்முடைய அநேக தோல்வியையே தழுவுகிறது. ஆனால் கர்த்தர் ஒருபோதும் மாறாதவர். அவருடைய வார்த்தை ஒருகாலும் மாறாதது. அவர் நிச்சயம் வாக்குப்பண்ணினதை நிறைவேற்றாமல் விடுகிறவரல்ல. தம்முடைய மக்களைப் பராமரிப்பதில் அவர் தவறினதே கிடையாது. "சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்" (ஏசாயா:40:29) என்று வேதம் சொல்லுகிறது. உங்களுடைய சோர்வுகள், தளர்வுகள், நம்பிக்கையின்மையின் மத்தியில் அவர் உங்களுக்கு போதுமானவராக இருக்கிறார். அவர் உங்களை பெலப்படுத்துகிறவராக இருக்கிறார். இந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம் கூட இருந்துநம்மை ஆசிர்வதித்து நமக்கு ஒத்தாசை அனுப்புகிறவராக. ஆமேன்

ARTICLE BY MEN'S FLLOWSHIP




Article by

SIS.RENA

1 சாமுவேல் 1:15 அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக அப்படியல்ல, என் ஆண்டவனே நான் மனக்கலேசமுள்ள ஸ்திரி; நான் திராட்சை ரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை. நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன்.

## ஜெபமே! இருண்ட வாழ்வின் வெளிச்சம்:

எப்ராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சோப்பீம் என்னப்பட்ட ராமதாயீம் என்னும் ஊரில் வசித்த எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். ஒருத்தி பெயர் அன்னாள். இன்னொருத்தி பெயர் பெனின்னாள். அன்னாள் என்றால் கர்த்தரின் கிருபை என்று பொருள். அன்னாளுக்கு பிள்ளைகள் இல்லை. பெனின்னாளுக்கு பிள்ளைகள் இருந்தார்கள். எல்க்கானா ஒவ்வொரு வருடமும் சிலோவிலே கர்த்தருக்கு ஆராதனை செய்யவும், பலியிடவும் கடந்து போவான். அவன் அன்னாளை சிநேகித்தபடியால் பலி பொருட்களில் இரட்டிப்பான பங்கு அவளுக்கு கொடுப்பான். அன்னாள் மலடியாய் இருந்தபடியால் பெனின்னாள் அன்னாளின் மனம் நோகும்படி மிகவும் விசனப்படுத்தினாள். அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் நின்று வீண் வார்த்தையை அலப்பாமல் ஒரே காரியத்திற்காக ஜெபித்தாள். தன்னை ஆண்டவரிடம், “உமது அடியாள்” என ஒப்படைத்தாள். ஒரு குழந்தையை தாரும், அதுவும் ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் எனக் கேட்டாள். “நான் அவனை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பேன். அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை” என பொருத்தனை பண்ணி ஜெபித்தாள். ஏனோதானோ என்றல்ல, கடமைக்காக அல்ல, துயரத்திலும் வேதனையிலும் மனங்கசந்து அவள் தேவனிடம் கேட்டாள். தேவன்

அன்னாளின் விண்ணப்பத்தைக் கேட்டு ஒரு குமாரனை கொடுத்தார். கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அந்த பிள்ளைக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். அன்னாள் தான் பொருத்தனை செய்தபடி அவனை பால் மறக்க பண்ணினவுடன் தானே, தேவ சமூகத்தில் அவன் வளரும்படி கொண்டு விட்டாள். அவள் செய்த தீர்மானத்தில் உறுதியாய் இருந்தாள்.

நாமும் நம்முடைய வாழ்வின் பிரச்சனைகள் மத்தியிலும் ஜெபம் பண்ணும் போது நிந்தைகள், துக்கங்கள் மாறும். அதுபோல ஆலயத்தை நேசிக்கிற அனைவரின் துக்கத்தையும் தேவன் சந்தோஷமாக மாற்றுவார். நம்முடைய இருண்ட வாழ்வை ஜெபமே ஒளிமயமாக்கும். கர்த்தர் தாமே உங்களை ஜெபிக்கிற ஒரு தாயாக, சகோதரிகளாக ஊழியக்காரராக மாற்றுவாராக! ஆமென்.



WOMEN'S *Fellowship*

# பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு

> “ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்.”
>
> —லூக்கா 21:36

இயேசு கிறிஸ்து தம்முடைய வருகையைக் குறித்து இங்கு பேசுகிறார். இரண்டாம் வருகையானது மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் மனுஷகுமாரன் வருவதாக இருக்கும். இன்றைய சூழ்நிலைகளை நாம் பார்க்கும் பொழுது வேதம் சொல்லுகிறது எவ்வளவு துல்லியமானதாக இருக்கிறது. இந்தக் கடைசி நாட்களில் கொள்ளை நோய்களும், பட்டினிகளும், பல இடங்களில் பூமி அதிர்ச்சி போன்ற அடையாளங்களும் அதிகமாய் நிகழ்கிறதைப் பார்க்கிறோம். உதாரணமாக இந்த ஆண்டில் எடுத்துக் கொள்வீர்களானால், அநேகஇடங்களில் பூமி அதிர்ச்சிகள் மற்றும் மேலும் நாம் சந்திக்கிற கொரோனா போன்ற கொள்ளை நோய்கள் போன்றவற்றை நாம் ஒரு நாளும் எண்ணியதும் கிடையாது. இவ்விதமான ஒரு காலத்தை நாம் சிந்தித்தது கூட கிடையாது. எவ்வளவோ விஞ்ஞான ரீதியான முன்னேற்றங்கள் இருந்தாலும் இந்த ஒரு சாதாரணமான கொரோனா வைரஸ்க்கு முன்பாக உலகமே தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஆண்டவர், இவைகளுக்கு எல்லாம் நாம் தப்பி, தேவனுடைய வருகைக்கு முன்பாக பிழைத்திருக்கும்படி பாத்திரவன்களாக எண்ணப்படுவதற்கு ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று சொல்லுகிறார். நம் வாழ்க்கையில் ஜெபத்தோடு கூடிய விழிப்பு தேவை. எல்லாவற்றையும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்து நமக்கு நியமித்திருக்கிற பாதையில் செல்ல வேண்டியது அவசியம். ஆகவே நாம் ஜெபத்தோடு விழித்திருப்போம். கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அவரையே நம் நம்பிக்கையாகக் கொண்டிருப்போம்.



YOUTH FELLOWSHIP

# JANUARY WINNERS

## Kids Colouring

- Hebron Samuel
- Jania Preni
- Reagan Shan
- Kariss Angelo

## Find the way

- Jania Preni
- Johan Sanjo
- Kariss Angelo
- Sherin Shah

Well Done!

## Important task

- Johan Sanjo
- Sherin Shah
- Abiya Sankaran
- Kariss Angelo

## Important task

- Johan Sanjol
- Sherin Shah
- Naveen Sankaran

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** **Your name / Quiz, type / Month – Year**

**To Church Email:** **csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# C.S.I. - தமிழ் திருச்சபை - அல்-ஞெயன் -U.A.E.

## 40 நாள் லெந்துகால தியானம் - 2023

## Lenten Devotionals - 2023

Timing -
6.00 amto 6.30 am

நாள் : 22-02-2023 – சாம்பல் புதன் முதல் 08.04.2023 – சனிக்கிழமை வரை

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 22-02-2023<br>சாம்பல் புதன் | கடவுளின் அன்பை பெற்றவர்கள்<br>Who are loved by God | ரோமர் 1:1 |
| 23-02-2023<br>வியாழன் | நற்செய்தியை தரும் கடவுள்<br>The Gospel he promised | ரோமர் 1:2 |
| 24-02-2023<br>வெள்ளி | தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்<br>The Spirit of Holiness | ரோமர் 1:4 |
| 25-02-2023<br>சனி | பிற இனத்தார் அழைப்பு<br>To call people from among all the gentiles | ரோமர் 1:6 |
| 27-02-2023<br>திங்கள | நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உலகம் முழுவதிலும் தெரிந்திருக்கிறது.<br>Your faith is being reported all over the world | ரோமர் 1:8 |
| 28-02-2023<br>செவ்வாய் | ஆவிக்குரிய கொடை ஏதேனும் உங்களுக்கு வழங்க வேண்டுமென விழைகிறேன்.<br>I may impart to you some spiritual gift to make you strong. | ரோமர் 1:11 |
| 01.03.2023<br>புதன் | நற்செய்தியே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை<br>Gospel is the power of God for the Salvation | ரோமர் 1:16 |
| 02.03.2023<br>வியாழன் | தங்கள் நெறிகேட்டினால் உண்மையை ஒதுக்கி விடுகின்றார்கள்.<br>Suppress the truth by their wickedness | ரோமர் 1:18 |
| 03.03.2023<br>வெள்ளி | பிறருக்கு எதிராக தீர்ப்பு?<br>Who pass judgement on someone else? | ரோமர் 2:1 |
| 04.03.2023<br>சனி | உங்கள் மனம் மாறச் செய்வதற்கே கடவுள் பரிவு காட்டுகிறார்.<br>God's kindness leads you towards repentance | ரோமர் 2:4 |
| 06.03.2023<br>திங்கள் | கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை<br>For God does not show favoritism | ரோமர் 2:11 |
| 07.03.2023<br>செவ்வாய் | திருச்சட்டத்தைக் கேட்பதால் மட்டும் யாரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை.<br>For it is not those who hear the law | ரோமர் 2:13 |
| 08.03.2023<br>புதன் | உங்களால் கடவுளின் பெயர் இகழ்ப்படுகின்றது.<br>God's name is blasphemed… because of you. | ரோமர் 2:24 |

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 09.03.2023<br>வியாழன் | மனிதர்கள் பாவிகள் என்பதையே சட்டம் உணர்த்துகிறது.<br>Through the law we become conscious of sin. | ரோமர் 3:20 |
| 10.03.2023<br>வெள்ளி | தமது நீதியை கடவுள் பொறுமையோடு காட்டி வருகிறார்.<br>He did it to demonstrate his justice. | ரோமர் 3:26 |
| 11.03.2023<br>சனி | நம்பிக்கைக் கொண்டு கடவுளுக்கு ஏற்புடையவர் ஆனாதால் தான் அவ்வாக்குறுதி கிடைத்தது....<br>But the righteousness that comes by faith. | ரோமர் 4:13 |
| 13.03.2023<br>திங்கள் | பாவிகளாய் இருந்தபோதே, கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார்.<br>Christ died for us. | ரோமர் 5:8 |
| 14.03.2023<br>செவ்வாய் | கிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கிறது.<br>So also grace might reign through righteousness. | ரோமர் 5:21 |
| 15.03.2023<br>புதன் | கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.<br>But alive to God in Christ Jesus. | ரோமர் 6:11 |
| 16.03.2023<br>வியாழன | நீங்கள் காணும் பயன் தூய வாழ்வு<br>But now you have been set free from sin. | ரோமர் 6:22 |
| 17.03.2023<br>வெள்ளி | சட்டம் இல்லையேல் பாவத்திற்கு உயிர் இல்லை.<br>For apart from law sin is dead. | ரோமர் 7:8 |
| 18.03.2023<br>சனி | எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்.<br>But what I hate I do. | ரோமர் 7:14 |
| 20.03.2023<br>திங்கள் | ஊனியல் மனநிலை கடவுளுக்கு பகையானது<br>The sinful mind is hostile to God. | ரோமர் 8:7 |
| 21.03.2023<br>செவ்வாய் | கடவுளின் அன்பிலிருந்து நம்மை பிரிக்கவே முடியாது.<br>will not be able to separate from the love of God. | ரோமர் 8:39 |
| 22.03.2023<br>புதன் | கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது.<br>But on God's mercy. | ரோமர் 9:16 |
| 23.03.2023<br>வியாழன் | தடைக்கல்லின் மேல் தடுக்கி விழுந்தனர்.<br>They stumbled over the stumbling stone. | ரோமர் 9:32 |
| 24.03.2023<br>வெள்ளி | அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்.<br>Anyone who trusts in him will never be put to shame. | ரோமர் 10:11 |

Lenten Devotionals - 2022 Timing - 6.00 amto 6.30 am

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 25.03.2023<br>சனி | தவறி விழுந்தவர்களின் மேல் கண்டிப்பும் உங்கள் மேல் பரிவும் அவர் காட்டுகின்றார்.<br>Sternness to those who fell, but kindness to you. | ரோமர் 11:22 |
| 27.03.2023<br>திங்கள் | உங்கள் உள்ளம் புதுபிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக.<br>But be transformed by the renewing of your mind. | ரோமர் 12:2 |
| 28.03.2023<br>செவ்வாய் | நமக்கு அளிக்கப்பட்ட அருளுக்கேற்ப வெவ்வேறு அருட்கொடைகளைப் பெற்றுள்ளோம்.<br>We have different gifts, according to the grace given us. | ரோமர் 12:6 |
| 29.03.2023<br>புதன் | பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்.<br>Honor one another above yourselves. | ரோமர் 12:10 |
| 30.03.2023<br>வியாழன் | பெருமிதம் வேண்டாம்.<br>Do not be proud. | ரோமர் 12:16 |
| 31.03.2023<br>வெள்ளி | பழிவாங்குதல் வேண்டாம்.<br>Do not take revenge. | ரோமர் 12:19 |
| 01.04.2023<br>சனி | நற்செயல் செய்வோர் ஆள்வோருக்கு அஞ்சவேண்டியதில்லை.<br>For rulers hold no terror for those who do right. | ரோமர் 13:3 |
| 03.04.2023<br>திங்கள் | இறையாட்சி என்பதும் நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதில்லை.<br>For the kingdom and God is not a matter of eating or dinking. | ரோமர் 14:17 |
| 04.04.2023<br>செவ்வாய் | உறுதியான மனநிலையோடு செய்யப்படாததெல்லாம் பாவமே.<br>Everything that does come from faith is sin. | ரோமர் 14:23 |
| 05.04.2023<br>புதன் | ஒருமனப்பட்டு... ஒரு வாய்ப்படப் போற்றி புகழ்வீர்கள்.<br>Give you a spirit of unity among yourselves as you follow Christ Jesus. | ரோமர் 15:6 |
| 06.04.2023<br>வியாழன் | கடவுளின் ஆவியின்... வேறெதைப்பற்றியும் பேச துணியமாட்டேன்.<br>I will not venture to speak anything except what Christ has accomplished. | ரோமர் 15:19 |
| 07.04.2023<br>வெள்ளி | எருசலேமில் வாழும் இறைமக்களுக்கு உண்மையில் பிற இனத்தார் கடன் பட்டவர்களே.<br>They owe it to the Jews to share with them their material blessings. | ரோமர் 15:27 |
| 08.04.2023<br>சனி | இதனால் அவர்கள் நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொள்வர்.<br>So that all nations might believe and obey him. | ரோமர் 16:26 |

# EXODUS:1-10

## யாத்திராகமம்:1-10

FEBRUARY '23 - QUESTIONS

1. யாரை அறியாத புதிய ராஜா எகிப்தில் தோன்றியது?
2. யாருக்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்?
3. நான் எம்மாத்திரம் என்று சொன்னது யார்?
4. யாரை? யார் முத்தம் செய்தது?
5. ஏன் என்னை அனுப்பினீர்? என்று ஆண்டவரிடம் கேட்டது யார்?
6. எல்சாபான் யாருடைய குமாரன்?
7. எந்த தேசம் முழுவதும் இரத்தமாயிருந்தது?
8. எந்த நாட்டில் வண்டுகள் வராதபடி ஆண்டவர் செய்தார்?
9. எந்த நாட்டில் மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது?
10. வெட்டுக்கிளிகள் எந்த தேசம் எங்கும் பரவியது?






### ஜனவரி - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ஆதி: 41:41 | 2. ஆதி: 42:5 | 3. ஆதி: 43:30 | 4. ஆதி: 44:14 | 5. ஆதி: 45:12
6. ஆதி: 46:14 | 7. ஆதி: 47:28 | 8. ஆதி: 48:3 | 9. ஆதி: 49:19 | 10. ஆதி: 50:22

திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஜெயின் ராஜவேல்,
திருமதி. ரேனா ஜோஸ் செல்வகுமார், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா, *DR.* சுவிட்லின் அபி

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.


Your Name / Bible Quiz / JAN'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:


Date:

# Kids Coloring



# Find the Way to Jesus

Name : ........................................................................



# ASH WEDNESDAY

## WORD SEARCH

Find the words listed below


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | L | E | W | W | N | F | K | Y | C | V | E | J | F | F |
| G | A | Y | P | O | S | H | N | D | S | F | N | Y | L | S |
| I | H | K | J | C | T | I | V | E | B | I | H | A | W | J |
| A | O | Y | E | N | A | W | Q | A | V | E | N | M | E | X |
| N | Y | C | D | T | M | R | J | X | Q | B | O | E | D | N |
| B | L | A | S | Z | U | C | H | D | X | A | L | Z | N | K |
| Q | I | B | C | G | S | F | A | S | T | W | O | E | E | T |
| L | A | T | O | S | C | L | P | I | H | P | F | W | S | L |
| G | U | D | O | P | D | F | O | R | E | H | E | A | D | S |
| N | S | R | C | R | Q | R | L | J | N | G | X | Y | A | O |
| B | C | N | G | R | E | C | E | S | J | V | V | U | Y | K |
| C | L | S | D | T | F | Q | N | R | E | P | E | N | T | Q |
| Z | L | L | S | L | E | U | T | D | W | Y | V | J | S | X |
| Z | H | A | S | H | E | S | E | D | F | L | K | V | F | Y |
| C | E | D | L | J | Y | M | C | V | V | I | K | W | V | W |

- ABSTAIN
- ASHES
- BLESS
- CROSS
- EASTER
- FAST
- FOREHEAD
- LENT
- REPENT
- WEDNESDAY

CROSS WORDS

Name : ............................................................

# ASH WEDNESDAY




**Across**

**3.** The day before Ash Wednesday is known as _________ Tuesday

**6.** The ashes put on people's foreheads is to remind them of their ___________

**7.** Ash Wednesday is the first day of _____

**8.** Lent is never mentioned in the _______

**10.** This pastry means night of fasting

**11.** Frederick, Maryland is the home of this pastry

**Down**

**1.** Fasting is usually combined with this

**2.** Pennsylvanians often put this tuber in their fastnachts

**4.** Biblical figures do us ______ and ashes as a sign of mourning

**5.** The signing is done with ashes because ashes are a biblical symbol of ________ and penance.

**9.** Believers often give up food for spiritual purposes, which is called _________

# FEBRUARY

| | |
|---|---|
| 02-FEB | Baby. Jessica .A d/o MR. Ashok Kumar S |
| 02-FEB | Mastr. Naveen s/o MR. Sankaran Chinniyan |
| 03-FEB | Mr. Noble Selvan |
| 07-FEB | Mrs. Abisha K.S |
| 12-FEB | Rev. M. Christopher Rajendran |
| 13-FEB | Mr. Jensin Bose.S |
| 14-FEB | Baby. Jayne John Joseph d/o MR. John Joseph |
| 15-FEB | Baby. Patricia Leenus Obed d/o MR. Patrick |
| 17-FEB | Mr. Sunith Samuel |
| 19-FEB | Ms. Pearlyn Ronia Prince d/o MR. Prince |
| 20-FEB | Baby. Liana Ann Samuel d/o MR. Sunith |
| 20-FEB | Mastr. Jason Eric s/o MR. Daniel Durai Singh |
| 22-FEB | Mrs. Jeyantha |
| 25-FEB | Baby. Hazel Hartlyn d/o MR. Herchil Harish |
| 25-FEB | Mr. Giftus Marvin |
| 25-FEB | Ms. Mukila d/o MR. A.Ravichandran |
| 25-FEB | Mr. Leenus Patrick Obed |
| 25-FEB | Mrs. Babitha Babu |
| 26-FEB | Mastr. Lokesh s/o MR. Sankaran Chinniyan |

*Wish you many more happy returns of the day God bless you all*

FEBRUARY

# Wedding

ANNIVERSARY

| | |
|---|---|
| **02-FEB** | Dr. Godwin Devadhas Packiaraj<br>&<br>Mrs. Jean Christy Emmanuel |
| **11-FEB** | Mr. Justin Oliver<br>&<br>Mrs. Sahila Grace Justin |
| **22-FEB** | Mr. Bakkiyam<br>&<br>Mrs. ArputhaMary Sandanam |
| **24-FEB** | Mr. A.Ravichandran<br>&<br>Mrs. R.Muneeswari |

# NEWLY ELECTED CSI SYNOD OFFICERS FOR THE TRINNIUM 2023-2026

*Hearty Congratulations*



**Most Rev. A. Dharmaraj Rasalam**
Moderator



**Rt. Rev. Dr. K. Reuben Mark**
Deputy Moderator



**Adv. C. Fernandas Rathina Roja**
General Secretary



**Prof. Dr. B. Vimal Sukumar**
Synod Treasurer










# *Sports Meet (Youth Fellowship)*

January 8, 2023

**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**



# *Ash Wednesday*

{INTO DUST YOU SHALL RETURN}

22 FEBRUARY, 2023

JOIN SERVICES AT 7.45PM
MAIH HALL
EVANGELICAL CENTRE - KANAD HOSPITAL - ABU DHABI

WWW.CSITAMILPARISHALAIN.ORG